*Government of Puducherry*
*Lieutenant Governor's Secretariat*

**No. LGS/PRO/2021** **11th February 2021**

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு துணைநிலை ஆளுநர் அவர்கள் இன்று நலத் துறையின் செயலாளர் திரு C. உதயகுமார் மற்றும் அனைத்து நலத் துறையின் அதிகாரிகளுடன் மத்திய நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்களில் ஒன்றான பாரத பிரதமரின் ஆதி திராவிடர்களுக்கான வீட்டு வசதி திட்டத்தை நேருக்கு நேர் மெய்நிகர் கூட்டத்தின் மூலம் ஆய்வு செய்தார் அதன் விவரம் கீழ் வருமாறு:

பாரதப் பிரதமரின் வீட்டு வசதி திட்டத்தின் கீழ் பயன் பெறும் பயனாளிகளின் கட்டுமானங்களின் உண்மை நிலையையும், தவணையையும் அறிந்து கொள்ள நலத் துறையினரை ஈடுபடுத்தி ஒரு கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.

கட்டிடங்களின் பல்வேறு கட்டமைப்பின் நிலைகளையும் பயனாளிகளின் கருத்தையும் சிறு வீடியோ தொகுப்பாக தயாரித்து தேவையானவர்களுக்கு பகிர்ந்துகொள்ளுதல்.

பயனாளிகளிடம் அவர்களின் முன்னேறங்களுக்கு உண்டான கல்வி, திறன் மேம்பாடு, வருவாய் ஈட்டுவதற்கான வழிவகைகளுக்கான அறிவுரைகளை வழங்குதல்.

பாரதப் பிரதமரின் வீட்டு வசதி திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் அனைத்து திட்டப் பணிகளும் பரிந்துரைக்கப்பட்ட தரநிலை மற்றும் வழிகாட்டுதலின் படி உள்ளனவா என்பதனை உறுதி செய்ய வேண்டும். இது சம்மந்தமாக அவர்களுக்கு விழிப்புணர்வையும் ஏற்ப்படுத்த வேண்டும்.

713 பயனாளிகளுக்கு இத் திட்டத்தை செயல்படுத்தியபோது, இதுவரை கட்டுமான பணியினை துவக்காதவர்களையும் துவக்க வைக்கும் அளவிற்கு ஒரு உந்துதலை ஏற்படுத்தியது.

நலவழி துறை செயலாளர் இத்திட்டத்தினை செயல்படுத்தும் மத்திய அமைச்சகத்துடன் தொடர்பில் இருப்பதன் மூலம் இத்திட்டத்திற்கான நிதியை மிக விரைவில் பெற்றிட வழி வகுப்பார்.

நலவழி துறை செயலாளர் இத்திட்டத்தின் செயல்பாடுகள் சம்மந்தமாக அதன் அறிக்கையை சமர்ப்பிப்பார்.